මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: PRE/2024/93 2024.09.18

# சனாதிபதித் தேர்தல் - 2024 செப்டம்பர் 21

## அனுமதிபெற்ற அறிவித்தல்கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களை அகற்றுதல்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் தொடர்பான பின்வரும் விடயங்களுக்கு ஏற்பிசைவு தெரிவிப்பதன் மூலம் உதவுமாறு அனைத்து வேட்பாளர்கள், வாக்கெடுப்பு முகவர்கள், அதிகாரம்பெற்ற முகவர்கள், பெரும்பாக முகவர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களிடம் தயவுடன் வேண்டப்படுகின்றது.

1. அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்கள் நடாத்திச் செல்லப்படும் காலப்பகுதி:

| அலுவலக வகை | அலுவலகத்தை நடாத்திச் செல்லக்கூடிய காலப்பகுதி |
|---|---|
| வாக்கெடுப்பு மாவட்ட வாரியாக நிறுவப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை தேர்தல் அலுவலகங்கள் | 2024.09.19 ஆம் திகதி நள்ளிரவு வரை |
| ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவு வாரியாக நிறுவப்படும் அறிவித்தல் கொடுக்கப்பட்ட கிளை தேர்தல் அலுவலகங்கள்* | 2024.09.20, 21 ஆகிய தினங்களிலும் 2024.09.22 ஆம் திகதி நள்ளிவு வரையும் |
| ஒவ்வொரு தேர்தல் மாவட்ட வாரியாக நிறுவப்பட்டுள்ள அறிவித்தல் கொடுக்கப்பட்ட மைய அலுவலகங்கள் | 2024.09.22 ஆம் திகதி நள்ளிரவு வரை |
| வேட்பாளர்களின்/அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் பொதுவான வதிவிடத்தை அலுவலகமாக பயன்படுத்தியிருப்பின் | 2024.09.22 ஆம் திகதி நள்ளிரவு வரை |

**இந்த அலுவலகங்களை ஆரம்பிக்க வேண்டிய திகதி 2024.09.20 ஆகும்.*

2. பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லல்;

- வாக்கெடுப்பு மாவட்ட வாரியாக தற்போது நிறுவப்பட்டுள்ள அனுமதிபெற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களின், தேர்தல் மாவட்ட வாரியான மை அலுவலகங்களின், வாக்கெடுப்புப் பிரிவு அலுவலகங்களின் அலலது வேறு அனுமதிபெற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகமொன்றிலாயினும் அந்த அலுவலகங்களை அறிமுகப்படுத்துவதற்காக 40 சதுர அடி தாண்டாத பிரச்சாரப் பலகைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரச்சாரப் பலகைகள், சுவரொட்டிகள் அல்லது சோடனைகளையும் வேறு எந்தவொரு பிரச்சார நடவடிக்கைகளையும் **2024.09.18** ஆம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் மேற்கொள்ளலாகாது.

2024.09.19 ஆம் திகதி முற்பகலில் இவ்வாறான அறிவுறுத்தல்களுக்கு மாறாக நடாத்திச் செல்லப்படும் அலுவலகங்களைப் பரிசோதிப்பதற்கு மாவட்ட/பிராந்திய முறைப்பாட்டு முகாமைத்துவ அலகுகளின் பொலிஸ் அலுவலர்களையும் விசாரணை அலுவலர்களையும் கொண்ட குழுக்கள் வருகைதரும். அனுமதிபெற்ற அறிவித்தல் கொடுக்கப்பட்ட கட்சி அலுவலகங்களிலுள்ள பிரச்சாரப் பலகைகளை அகற்றுவதை **செப்டம்பர் மாதம் 19** ஆம் திகதியிலிருந்து மேற்கொள்வதுடன், தேர்தல் சட்டத்திற்கு அமைவானதல்லாத விதத்தில் நடாத்திச்செல்லப்படும் அலுவலகங்கள் இருப்பின் அவற்றை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்